செ.வெ.எண்.55 நாள்: 27.09.2018

**நாகப்பட்டினம் மாவட்டம்**

**மயிலாடுதுறை வட்டத்திற்குட்பட்ட கிராமங்களில் காலியாக உள்ள 11 கிராம உதவியாளர்கள் பணியிடங்கள் கீழ்கண்ட இனசுழற்சியின் அடிப்படையில் நிரப்பப்பட உள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்.இ.ஆ.ப.அவர்கள் தகவல்**

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டத்திற்குட்பட்ட கிராமங்களில் காலியாக உள்ள 11 கிராம உதவியாளர்கள் பணியிடங்கள் கீழ்கண்ட இனசுழற்சியின் அடிப்படையில் நிரப்பப்பட உள்ளது.

| இன சுழற்சி வரிசை எண் | பட்டியல் வகுப்புகள் | முன்னுரிமை | காலிப்பணியிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| 18 | BCO - WOMEN | முன்னுரிமையற்றவர் | 01 |
| 20 | BCO - GENERAL | முன்னுரிமை பெற்றவர் | 01 |
| 23 | MBC - WOMEN | முன்னுரிமையற்றவர் | 01 |
| 24 | BC - WOMEN | முன்னுரிமையற்றவர் | 01 |
| 25 | GENERAL TURN - WOMEN | முன்னுரிமையற்றவர் | 01 |
| 26 | SC - WOMEN | முன்னுரிமை பெற்றவர் | 01 |
| 27 | GENERAL TURN - GENERAL | முன்னுரிமையற்றவர் | 01 |
| 28 | MBC - GENERAL | முன்னுரிமை பெற்றவர் | 01 |
| 29 | GENERAL TURN - WOMEN | முன்னுரிமையற்றவர் | 01 |
| 30 | BC - WOMEN | முன்னுரிமையற்றவர் | 01 |
| 31 | GENERAL TURN – EX-SERVICEMAN | முன்னுரிமையற்றவர் | 01 |

கிராம உதவியாளர் பதவிக்கு 01.07.2018 தேதியில் பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் அட்டவணை வகுப்பினர் மற்றும் அட்டவணை பழங்குடி வகுப்பினர் குறைந்தபட்ச வயது 21 முதல் 35 வரையுள்ளவர்களும், இதர வகுப்பினர் குறைந்தபட்ச வயது 21 முதல் 30 வரையுள்ளவர்கள், குறைந்தபட்ச கல்வித்தகுதி 5-ஆம் வகுப்பு தேர்ச்சி முதல் 10-ஆம் வகுப்பு வரை தேர்ச்சியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். விருப்பம் உள்ளவர்கள் சுய விவரங்களுடன் கூடிய விண்ணப்பத்துடன் கல்வித்தகுதிக்கான சான்று நகல், சாதிச்சான்று நகல், இருப்பிடச்சான்று நகல், வருமானச்சான்று நகல், முன்னுரிமை கோருவதற்கான சான்று, வேலைவாய்ப்பு அலுவலக பதிவு நகல், குடும்ப அட்டை மற்றும் ஆதார் அட்டை நகல் ஆகிய ஆவணங்களுடன் எதிர்வரும் 15.10.2018 பிற்பகல் 5.00 மணிக்குள் வட்டாட்சியர் மயிலாடுதுறை வட்டம், மயிலாடுதுறை என்ற முகவரிக்கு கிடைக்கும் வகையில் நேரிலோ – அஞ்சல் மூலமாகவோ விண்ணப்பிக்க வேண்டும்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் சீ.சுரேஷ்குமார் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**